# ஜார்ஜ் டவுன் விதிமீறல் கட்டட விவகாரம்

## தமிழக அரசு இன்று முக்கிய முடிவு

– நமது நிருபர் –

சென்னை ஜார்ஜ் டவுனில் உள்ள விதிமீறல் கட்டடங்கள் தொடர்பான மேல் முறையீடுகள் குறித்து, தமிழக அரசு இன்று முக்கிய முடிவு எடுக்கவுள்ளது.

சென்னை ஜார்ஜ் டவுன் பகுதியில், விதிகளை மீறி கட்டப்பட்டுள்ள கட்டடங்களின் மீது, மாநகராட்சி, பெருநகர் வளர்ச்சி குழுமம் (சி.எம்.டி.ஏ.,) நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி, உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த விவகாரத்தில் சி.எம்.டி.ஏ., மற்றும் மாநகராட்சி அதிகாரிகளை, பல்வேறு கட்டங்களில் கண்டித்த நீதிமன்றம், விதிமீறல் கட்டடங்கள் குறித்த முழுமையான விவரங்களைக் கேட்டது.

தமிழக அரசு அளித்த பதில் அறிக்கையில், குறிப்பிடப்பட்ட கட்டடங்களில் பெரும்பாலானவற்றின் மேல் முறையீட்டு மனுக்கள் அரசிடம் நிலுவையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

அந்த மனுக்கள் மீது விரைவாக நடவடிக்கை எடுக்க நீதிமன்றம் உத்தரவிட்டு உள்ளது.

### இன்று ஆலோசனை

இந்த உத்தரவை செயல்படுத்தும் விதமாக, நிலுவையில் உள்ள மேல் முறையீடுகளை முடிப்பது குறித்து ஆலோசிக்க வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலர் தர்மேந்திர பிரதாப் யாதவ், பல்வேறு அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்து உள்ளார். இதனால், ஜார்ஜ் டவுன் விதிமீறல் கட்டடங்கள் விவகாரத்தில், அரசு சார்பில் சில முக்கிய முடிவுகள் இன்று எடுக்கப்படும் என்று தெரிய வந்துள்ளது.

### தனக்கு தானே அழைப்பு?

ஜார்ஜ் டவுன் விதிமீறல் கட்டட விவகாரம் குறித்து விவாதிக்க, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலர் தர்மேந்திர பிரதாப் யாதவ் அழைப்பு விடுத்து உள்ளார். சென்னை மாநகராட்சி கமிஷனர், சி.எம்.டி.ஏ., உறுப்பினர் செயலர், நகர் – ஊரமைப்புத்துறை ஆணையர் ஆகியோருக்கு, தனித்தனியாக இதற்கான அழைப்பு விடுக்கப்பட்டு உள்ளது.

இதில், சி.எம்.டி.ஏ., உறுப்பினர் செயலர், நகர் – ஊரமைப்புத்துறை ஆணையர் பொறுப்புகளை வீட்டுவசதி துறை செயலர் தர்மேந்திர பிரதாப் யாதவ் தான், கூடுதலாக கவனித்து வருகிறார். இந்நிலையில், இன்று நடக்க உள்ள கூட்டத்தில் ஒரே நபர், மூன்று அதிகாரியாக செயல்படுவாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

# கத்தியுடன் வந்த மாணவன் கைது போலீசாரிடம் பரபரப்பு வாக்குமூலம்

அண்ணாசதுக்கம், ஜூலை 5–

கல்லூரிக்கு கத்தியுடன் வந்த சமூக அறிவியல் மாணவனை, போலீசார் கைது செய்துள்ளனர்.

சென்னையில் கல்லூரி மாணவர்கள் பயங்கர ஆயுதங்களுடன் மோதிக் கொள்ளும் சம்பவம் அடிக்கடி நடைபெற்று வருகிறது. இதை தடுக்கும் வகையில், பல்வேறு நடவடிக்கைகளை போலீஸ் கமிஷனர் எடுத்து வருகிறார். அதன் அடிப்படையில், கல்லூரிக்கு வரும் மாணவர்களை, ஆசிரியர்கள் முன்னிலையில் சோதனை செய்த பின்னரே, அனுமதித்து வருகின்றனர்.

### இடுப்பில் கத்தி

நேற்று மதியம், 12:00 மணியளவில், மாநிலக்கல்லூரியில் இதேபோன்று, ஒவ்வொரு மாணவனையும் போலீசார் சோதனை செய்து அனுமதித்துக் கொண்டு இருந்தனர். அப்போது ஒரு மாணவனை சோதனை செய்தபோது, இடுப்பில் கத்தி வைத்து இருப்பதை போலீசார் கண்டுபிடித்தனர். இதையடுத்து




மாணவனிடம் பறிமுதல் செய்யப்பட்ட கத்தி.

அவனை, அண்ணாசதுக்கம் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரித்தனர்.

### சமூக அறிவியல் மாணவன்

மாநிலக்கல்லூரியில் சமூக அறிவியல் மூன்றாம் ஆண்டு படிக்கும் அந்த மாணவன், வியாசர்பாடியைச் சேர்ந்தவன். தினமும், 2 ஏ பேருந்தில் வரும் அந்த மாணவனை, சென்ட்ரல் அருகே செல்லும்போது பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் சிலர், அடிக்கடி வம்பு இழுப்பதாகவும், மீண்டும் அப்படிச் செய்தால், தாக்கவே அதைக் கொண்டு வந்ததாகவும், போலீசாரிடம் அவன் தெரிவித்துள்ளான். அவனை, போலீசார் கைது செய்தனர்.

## ஓடும் பேருந்திலிருந்து குதித்தவர் பலி

சென்னை, ஜூலை 5–

காமராஜர் சாலையில் ஓடும் பேருந்திலிருந்து குதித்த முதியவர், தலையில் அடிபட்டு, அதே இடத்தில் உயிரிழந்தார்.

பாரிமுனை – கூடுவாஞ்சேரி செல்லும் வழித்தடம் எண் 21 விரைவு பேருந்து, காமராஜர் சாலை வழியாக நேற்று மாலை, 7:00 மணியளவில் சென்று கொண்டு இருந்தது. காமராஜர் சாலை சென்னை பல்கலைக் கழக தங்கும் விடுதி அருகே சென்ற போது, முதியவர் ஒருவர், திடீரென பேருந்திலிருந்து குதித்தார். இதில், தலையில் பலத்த காயமடைந்த அவர், சம்பவ இடத்திலேயே பலியானார்.

சம்பவம் அறிந்து வந்த அண்ணாசதுக்கம் போலீசார், உடலை மீட்டு, பிரேத பரிசோதனைக்காக, ராயப்பேட்டை மருத்துவமனைக்கு அனுப்பினர். விசாரணையில், அவர் பெயர் டேவிட், 66 என்பது தெரியவந்தது. அவர், எந்த ஊரைச் சேர்ந்தவர் என்பது குறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# செம்மரம் பதுக்கப்பட்ட கிடங்கிற்கு 'சீல்'

–நமது நிருபர்–

செம்மரக்கட்டைகள் பதுக்கப்பட்டிருந்த கிடங்கில், ஆந்திர போலீசார் நடத்திய சோதனையில் ஒரே ஒரு செம்மரத்துண்டு மட்டுமே கிடைத்தது. ஆயினும், கிடங்கிற்கு 'சீல்' வைக்கப்பட்டது.

ஆந்திராவில் இருந்து லாரிகள் மூலம் கடத்தப்படும் செம்மரக் கட்டைகள், சென்னையின் சுற்று வட்டாரங்களில் உள்ள, தனியார் கிடங்குகளில் பதுக்கப்படுவதாக, ஆந்திர போலீசாருக்கு தகவல் கிடைத்தது. கடந்த சில தினங்களுக்கு முன், திருப்பதி டி.எஸ்.பி., கொண்டாரெட்டி தலைமையிலான போலீசார், அரக்கோணத்தில் ரமேஷ் மற்றும் மேற்கு ஜாபர்கான் பேட்டையில் குமார் என இரு லாரி டிரைவர்களை கைது செய்தனர்.

### 7 டன் செம்மரம்

அதில், பூந்தமல்லி அடுத்த குன்றத்தூர் அருகே உள்ள திருமுடிவாக்கத்தில், இரு கிடங்குகளில் செம்மரக்கட்டைகள் பதுக்கப்பட்டிருப்பது தெரிந்தது. அங்கு நடந்த சோதனையில் ஒரு கிடங்கில், மூன்று கோடி ரூபாய் மதிப்புள்ள, 7 'டன்' செம்மரக்கட்டைகள் சிக்கின. மற்றொரு கிடங்கில் எதுவும் சிக்கவில்லை.

### ஒரே ஒரு கட்டை

தொடர் விசாரணையில், செங்குன்றம் அருகே விளாங்காடுபாக்கம் கிராமம், யூசுப் நகரில் உள்ள தனியார் கிடங்கிலும் பல டன்னுக்கு, செம்மரக்கட்டைகள் பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது. ஆந்திர போலீசார், நேற்று அதிகாலை, அந்த கிடங்கில் சோதனை நடத்தினர். அதில், 50 கிலோ எடை கொண்ட, ஒரே ஒரு செம்மரக்கட்டை மட்டும் கிடைத்தது. அதைக் கைப்பற்றிய ஆந்திர போலீசார், அந்த கிடங்கிற்கு, 'சீல்' வைத்தனர்.

### ஊராட்சி தலைவர் கைது

பாடியநல்லூர் ஊராட்சி தலைவர் பார்த்திபன். அவர், ஆந்திராவில் செம்மரக்கட்டைகளை கடத்தி வந்து, சென்னையில் பதுக்கி வைத்துள்ளார். ஆந்திர போலீசார் அவரது குடோன் உள்ளிட்ட இடங்களில் சோதனை நடத்தி, செம்மரக்கட்டைகளை பறிமுதல் செய்துள்ளனர். தலைமறைவாக இருந்த பார்த்திபனை, நேற்று மாலையில், அண்ணா சாலையில் காரில் சென்ற போது, ஆந்திர போலீசார் சுற்றிவளைத்து கைது செய்தனர். பின், அண்ணாசாலை காவல் நிலையத்தில் தகவல் தெரிவித்துவிட்டு, ஆந்திராவிற்கு அழைத்துச் சென்றனர்.

# நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தை தத்தெடுக்கும் லயோலா கல்லூரி

– நமது நிருபர் –

பெண் இன்ஜினியர் சுவாதி கொலையை தொடர்ந்து, நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தைத் தத்தெடுத்து, பராமரிப்பிலும், பாதுகாப்பிலும் முன்மாதிரி நிலையமாக மாற்ற, லயோலா கல்லூரி முன்வந்துள்ளது.

நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தின், ஒரு பகுதியில், லயோலா கல்லூரி வளாகமும்; மற்றொரு பகுதியில், சூளைமேடும் உள்ளது.

ரயில் நிலையத்தின் அருகில், சந்தையோ, கடைத்தெருவோ இல்லாததால், ரயில்கள் வரும் நேரங்களில் மட்டுமே, மக்கள் நடமாட்டம் இருக்கும். மற்ற நேரத்தில் நிசப்தமாகவே இருக்கும்.

அமைதியான இந்த நிலையத்துக்கு வரும் பயணிகளுக்கு, பாதுகாப்பை பலப்படுத்த, ரயில்வே அதிகாரிகள் பல ஆய்வுகளை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில், நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தை பராமரிப்பிலும், பாதுகாப்பிலும் முன்மாதிரி நிலையமாக மாற்ற, லயோலா கல்லூரி




முன்வந்துள்ளது.

ஒரு ஆண்டுக்கு முன், கல்லூரியின் அதிகாரிகள் கூட்டத்தில், கல்லூரி செயலர் தாமஸ் அமிர்தம், முதல்வர் அந்தோணிசாமி, பொது தொடர்பு அதிகாரி அந்தோணிசாமி உள்ளிட்டோர், இந்த திட்டம் குறித்து பேசியுள்ளனர்.

ஆனால், திட்டத்தை அமல்படுத்தும் முன், சுவாதி கொலை சம்பவம் நடந்துவிட்டது. எனவே, ரயில் நிலைய தத்தெடுப்பு திட்டத்தை உடனடியாக அமலுக்கு கொண்டு வர, கல்லூரி நிர்வாகம் முடிவு செய்துள்ளது. இதுகுறித்து, ரயில்வே அதிகாரிகளிடம் பேச்சு துவங்கியுள்ளது.

### என்னென்ன திட்டங்கள்?

- ரயில் நிலையத்தின் அனைத்து பகுதிகளையும் கண்காணிக்க கேமராக்கள் பொருத்துதல்
- கேமரா பதிவுகள், போலீஸ், ரயில்வே மற்றும் கல்லூரி நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் வைக்கப்படும்
- காலை முதல் மாலை வரை, 'ஷிப்டு' முறையில், கல்லூரியின் என்.எஸ்.எஸ்., மாணவர்கள், தன்னார்வ மாணவர் குழுக்கள் ரயில் நிலைய ரோந்து மற்றும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவர்
- பயணிகளுக்கான உதவி தொலைபேசி எண் தனியாக அறிவிக்கப்படவுள்ளது.

இவ்வாறு பல திட்டங்களை மேற்கொள்ள, லயோலா கல்லூரி அதிகாரிகள், ரயில்வே அதிகாரிகள் பேச்சு நடத்தி வருகின்றனர்.

# பார்த்தசாரதிக்கு தங்கத்தால் ஆன பஞ்ச பருவ கேடயம்

சென்னை, ஜூலை 5–

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள் கோவிலில், தங்கத்தால் செய்யப்பட்ட பஞ்ச பருவ கேடயத்தில் உற்சவர் பார்த்தசாரதி பெருமாள், மாட வீதிகளை வலம் வந்து அருள் பாலித்தார்.

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள் கோவிலில், மாதந்தோறும் பஞ்ச பருவ நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. இதில், அமாவாசை, பவுர்ணமி, மாதப்பிறப்பு, இரண்டு ஏகாதசி ஆகிய ஐந்து நாட்களில் ஸ்ரீதேவி, பூதேவி நாச்சியாருடன் உற்சவர் பார்த்தசாரதி பெருமாள், மாடவீதிகளை வலம் வந்து அருள் பாலிப்பார்.

தங்கதோலுக்கினியான் எனப்படும் இந்த பல்லக்கில் உள்ள பஞ்ச பருவ கேடயத்தை, சேவார்த்தி ஒருவர், தங்கத்தில் செய்து கொடுத்துள்ளார். தேக்கு மரத்தில் செய்யப்பட்ட பல்லக்கு, செப்பு தகட்டின் மீது, 1.3 கிலோ எடை கொண்ட தங்க 'ரேக்'குகள் வேயப்பட்டுள்ளது; இதன் மதிப்பு 55 லட்சம் ரூபாய்.

புதியதாக செய்யப்பட்ட தங்க பஞ்ச பருவ கேடயத்தில், உற்சவர் பார்த்தசாரதி பெருமாள் ஸ்ரீதேவி, பூதேவி நாச்சியாருடன் அமர்ந்து, மாட வீதிகளை நேற்று மாலை வலம் வந்து அருள் பாலித்தார்.




திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள் கோவிலில், தங்கத்தால் செய்யப்பட்ட பஞ்ச பருவ கேடயத்தில், மாடவீதிகளை வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்த உற்சவர் பார்த்தசாரதி பெருமாள்.

**மின், குடிநீர் சிக்கனம் நாட்டின் அவசிய தேவை**

### திருட்டு நிலவரம்

| பறிகொடுத்தவர் | இடம் | நேரம் | பொருள் | நடந்த விதம் | யார் விசாரணை |
|---|---|---|---|---|---|
| எம்.உலகநாதன், 42 | சிவசண்முகம் தெரு, பழைய பெருங்களத்துார் | நேற்று மதியம், 2:30 மணி | 5 சவரன் | வீட்டின் பூட்டை உடைத்து... | பீர்க்கன்காரணை காவல் நிலையம், பரங்கிமலை காவல் மாவட்டம். |

### செயின் பறிப்பு

| பறிகொடுத்தவர் | இடம் | நேரம் | சவரன் | நடந்த விதம் | யார் விசாரணை |
|---|---|---|---|---|---|
| வி.சுசீலா, 32 | சிவன் கோவில் தெரு, நெடுங்குன்றம் | நேற்று மாலை, 4:00 மணி | 5.5 | இரு சக்கர வாகனத்தில் வந்த இரண்டு மர்ம நபர்கள் | பீர்க்கன்காரணை காவல் நிலையம், பரங்கிமலை காவல் மாவட்டம் |
| ஜெயகுமாரி, 50 | ஆலபக்தர் சாலை, ஐஸ்அவுஸ் | நேற்று காலை 5:30 மணியளவில் | 3.5 | இரு சக்கர வாகனத்தில் வந்த மர்மநபர் | ஐஸ் அவுஸ் காவல் நிலையம், மயிலாப்பூர் காவல் மாவட்டம் |
| காமேஸ்வரி, 38 | ஆனந்த விநாயகர் கோவில் அருகில், எர்ணாவூர் | நேற்று மதியம் 2:00 மணியளவில் | 7 | இரு சக்கர வாகனத்தில் வந்த நபர்கள் | எண்ணுார் காவல் நிலையம், மாதவரம் காவல் மாவட்டம் |
| ஜெயந்தி, 45 | சக்தி நகர், பழைய பெருங்களத்துார் | நேற்று முன்தினம் காலை | 6 | இரு சக்கர வாகனத்தில் வந்த நபர்கள் | பீர்க்கண்காரணை காவல் நிலையம், பரங்கிமலை காவல் மாவட்டம் |

# இலவச மருத்துவ முகாம்

நெசப்பாக்கம், ஜூலை 5–

பாரதமாதா சேவை சங்கம் மற்றும், 'விங்ஸ் ஆப் சேஞ்ச்' இணைந்து நடத்திய இலவச மருத்துவ முகாம், நெசப்பாக்கம் அமிர்தா வித்யாலயம் மேல்நிலைப்பள்ளியில், நேற்று முன்தினம் நடைபெற்றது. காலை 9:30 மணி முதல 2:00 மணி வரை, நடைபெற்ற முகாமில், 200க்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்றனர்.

முகாமில், சர்க்கரை மற்றும் எலும்பு அடர்த்தி பரிசோதனை, பெண்கள் மருத்துவ பரிசோதனை, இதய சிகிச்சை, பொது மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்டன. பாரம்பரிய மூலிகை மருத்துவ சிகிச்சையும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

இதுகுறித்து, ஸ்ரீபிரியா ஐயர் கூறுகையில், ''முகாமிற்கு வருவோரிடம், ஒரு படிவம் கொடுக்கிறோம். அதில், மத்திய அரசின் திட்டங்களான, பிரதம மந்திரி ஜன்தன் திட்டம், பிரதம மந்திரி முத்ரா திட்டம் உள்ளிட்ட திட்டங்களில் சேர்ந்துள்ளனரா என்ற விவரத்தைக் கோருகிறோம். இல்லை என, பூர்த்தி செய்தால், அவர்களுக்கு மத்திய அரசின் திட்டங்களை பெற உதவி செய்வோம். மேல் சிகிச்சைக்கும் உதவி செய்கிறோம்,'' என்றார்.




பாரதமாதா சேவை சங்கம் மற்றும், 'விங்ஸ் ஆப் சேஞ்ச்' இணைந்து நடத்திய இலவச மருத்துவ முகாம்.

# மறுபடியும் கார்த்திகேயன் மாநகராட்சி கமிஷனரானார்

சென்னை, ஜூலை 5–

சென்னை மாநகராட்சிக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கமிஷனர், நேற்று மாலை பொறுப்பேற்றுக் கொண்டார்.

சென்னை மாநகராட்சி கமிஷனராக இருந்த, டாக்டர் சந்திரமோகன், வருவாய் துறை செயலராகவும், தொல்லியல் துறை கமிஷனராக இருந்த டாக்டர் கார்த்திகேயன், சென்னை மாநகராட்சி கமிஷனராகவும் நியமித்து, தமிழக அரசு நேற்று உத்தரவு பிறப்பித்தது.

இதையடுத்து, நேற்று மாலை, 4:00 மணிக்கு, புதிய கமிஷனர் கார்த்திகேயன், ரிப்பன் மாளிகையில் பொறுப்பேற்றுக் கொண்டார். சந்திரமோகன், அவரிடம் பொறுப்பை ஒப்படைத்து விடை பெற்றார். பொறுப்பேற்ற சில மணி நேரங்களில், தலைமைச் செயலகத்தில் நடந்த ஆய்வு கூட்டத்தில், கார்த்திகேயன் கலந்து கொண்டார்.

கார்த்திகேயன், விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை மாநகராட்சியின் முதல் கமிஷனராக பணியாற்றி, சில மாதங்களிலேயே மாற்றப்பட்டார். டேவிதாருக்குப் பின், 2012லும், மீண்டும் கமிஷனராக நியமிக்கப்பட்டு, சில மாதங்கள் பணியாற்றினார். மறுபடியும் மாற்றப்பட்டார். தற்போது, மூன்றாம் முறையாக, இதே மாநகராட்சிக்கு கமிஷனராக நியமிக்கப்பட்டுள்ளார்.




இந்தியன் வங்கி சார்பில், 'ரூ பே பிளாட்டினம் டெபிட் கார்டு' என்ற புதிய, 'டெபிட் கார்டு' அறிமுக நிகழ்ச்சி, சென்னை இந்தியன் வங்கி கார்ப்பரேட் அலுவலகத்தில் நடந்தது. இதை, இந்தியன் வங்கி தலைமை நிர்வாகி மகேஷ்குமார் ஜெயின், செயல் இயக்குனர்கள் ஆர்.சுப்ரமணிய குமார், ஏ.எஸ்.ராஜீவ் ஆகியோர் துவக்கி வைத்தனர். அருகில், இந்தியன் வங்கி துணை பொது மேலாளர் ரங்கராஜன் உள்ளார்.

# பேருந்தில் கைவரிசை மூன்று பெண்கள் கைது

வளசரவாக்கம், ஜூலை 5–

பேருந்தில் பயணிகளை திசை திருப்பி கொள்ளையடித்து வந்த மூன்று பெண்களை கைது செய்த போலீசார், அவர்களிடமிருந்து, 40 சவரன் நகை மற்றும் பணத்தை பறிமுதல் செய்துள்ளனர்.

வளசரவாக்கம் கேசவர்த்தினி பேருந்து நிறுத்தம் அருகே, வாகன சோதனையில், கடந்த, 2ம் தேதி இரவு, போலீசார் ஈடுபட்டு இருந்தனர். அப்போது, அவ்வழியாக வந்த பேருந்திலிருந்து இறங்கிய மூன்று பெண்கள், போலீசாரைக் கண்டதும் ஓடத் துவங்கினர். அவர்களை மடக்கிப் பிடித்து விசாரித்ததில், முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்துள்ளனர். மூவரையும் வளசரவாக்கம் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரித்தனர்.

இதில், அவர்கள் மூவரும் திருச்சி ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த ஜோதி, 30, செல்வி, 42, சிவரஞ்சனி, 24, என்பதும், மாநகர பேருந்துகளில் பயணிகளை திசை திருப்பி, தொடர்ந்து கொள்ளையடித்து வந்ததும் தெரியவந்தது.

இதையடுத்து, அவர்களை கைது செய்த போலீசார், அவர்களிடமிருந்து, 40 சவரன் நகை மற்றும், ஒரு லட்சத்து, 20 ஆயிரம் ரூபாய் பணத்தை பறிமுதல் செய்தனர்.